# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.34/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா- 01(PW-01 )** |
| **பெயர்** | :- | **மாணிக்கம்** |
| **தேதி** | :- | **15-07-2025** |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-**

நான், தனபால், பிரதிவாதியின் தகப்பனார் அங்கமுத்து ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான். என் தகப்பனாரின் பெயர் உத்தண்ட முதலியார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்தபோது தனபால் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 3 முதல் 5 வரையிலான வாதிகள் தனபாலின் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்குமுன் பிரதிவாதிகளின் தகப்பனார் அங்கமுத்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். அங்கமுத்துவிற்கு பிரதிவாதியை தவிர வேறு வாரிகள் இல்லை என்றால் சரிதான். நாங்கள் கூட்டாக துணி வணிகம் செய்தோம் என்று காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அங்கமுத்து உயிரோடு இருந்ததுவரை அவருக்கும் எனக்கும் தனபாலுக்கும் பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரச்சனை ஏதேனும் ஏற்பட்டால் அங்கமுத்து சமாதானம் செய்து தீர்த்து வைப்பார் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

அங்கமுத்து இறந்தபிறகு 1 ஆம் பிரதிவாதி குடும்பத்தில் பிரச்சனை செய்து வருவதாகவும் அதற்கு இரண்டாம் பிரதிவாதி உதவி செய்வதாகவும் நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியும் 2 ஆம் பிரதிவாதியும் சுமூக உறவில் இல்லை என்றால் சரிதான். உத்தண்ட முதலியார் அம்மாப்பேட்டையில் பல சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான். 1962 ஆம் ஆண்டு வாங்கினார் என்றால் சரிதான். 7.73 ஏக்கர் வாங்கினார். அந்த சொத்திற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

1971 ஆம் ஆண்டு தனபால், நான், அங்கமுத்து ஆகிய மூவரும் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். தேதி எனக்கு நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு 2 ஆம் சான்றாவணம்-தான் அது என்றால் சரிதான். 15.12.1971 ஆம் தேதியன்று அது ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு எந்தெந்த சொத்து ஒதுக்கப்பட்டதோ அந்தந்த சொத்தை அவரவர் எடுத்துக் கொண்டோம் என்றால் சரிதான். ஆனால் அதன் பிறகு கூட்டாகத்தான் விவசாயம் செய்தோம். நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

27.03.1985 ஆம் தேதியன்று நான், தனபால், அங்கமுத்து ஆகிய மூவரும் பாகப்பிரிவினையில் கண்ட சொத்தை ராமலிங்கம் மற்றும் கந்தப்ப கவுண்டர் என்ற இருவரிடம் பரிமாற்றம் செய்துகொண்டோம் என்றால் அந்த பரிமாற்றத்தில் பாகப்பிரிவினையில் ஒதுங்கிய சொத்துக்களும் உள்ளன. 1984 ஆம் ஆண்டு நாங்கள் மூவரும் தனிதனி ஆவணங்கள் மூலம் வாங்கிய சொத்துக்களும் உள்ளன. அந்த ஆவணம்தான் வாதி தரப்பு 7 ஆம் சான்றாவணம்.

இந்த வழக்கின் 5 ஆம் இனச்சொத்து 1971 ஆம் ஆண்டு நடந்த பாகப்பிரிவினையில் அங்கமுத்துவிற்கு ஒதுக்கப்பட்டு அவருடைய தனிப்பட்ட அனுபோகத்தில் இருந்துவரும் சொத்தா என்றால் இல்லை. மூவரும் கூட்டாகத்தான் அனுபோகம் செய்துவந்தோம். அந்த சொத்து அங்கமுத்துவின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றும் இந்த வழக்கிற்காக கூட்டுச் சுவாதீனத்தில் இருந்துவந்ததாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

வழக்கு 6 ஆம் இனச்சொத்து பரிமாற்ற ஆவணத்தின் அடிப்படையில் கிடைத்தது என்றால் சரிதான். பரிமாற்றம் மூலம் கிடைத்த சொத்துக்களை நாங்கள் மூவரும் தனிதனியாக பிரித்து அனுபோகம் செய்தோம் என்றால் சரியல்ல. ஒன்றாகதான் அனுபோகம் செய்தோம். பரிமாற்றம் மூலம் கிடைத்த சொத்துக்களை தனிதனியாக பிரித்து அனுபோகம் செய்கிறோம் என்றும் கூட்டாக அனுபோகம் செய்வதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

03.05.1984 ஆம் தேதியன்று வாதி தரப்பு 3 ஆம் சான்றாவணம் மூலம் தனபால் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். 07.05.1984 ஆம் தேதியன்று வாதி தரப்பு 4 ஆம் சான்றாவணம் மூலம் என் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். 07.05.1984 ஆம் தேதியன்று வாதி தரப்பு 5 ஆம் சான்றாவணம் மூலம் அங்கமுத்து பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். 10.12.1984 ஆம் தேதியன்று வாதி தரப்பு 6 ஆம் சான்றாவணம் மூலம் அங்கமுத்து பெயரில் கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

29.12.2000 ஆம் ஆண்டு உத்தண்ட முதலியார் விருப்பாணவம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும் அவ்வாறு எழுதி வைத்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விருப்பாவணத்தின் அசல் 1 ஆம் பிரதிவாதி சண்முகசுந்தரத்திடம் உள்ளது. அவர்தான் சான்றொப்பம் இட்டு வாங்கி சென்றார். நான் சொல்வது போன்று எதுவும் சண்முகசுந்தரத்திடம் இல்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த விருப்பாவணத்தின்படி அதில் கண்டுள்ள சொத்துக்களில் தனபால், அங்கமுத்து மற்றும் எனக்கு பொதுவாக பாகம் உள்ளது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

அந்த விருப்பாணவத்தில் கண்ட சொத்து என் தகப்பனாருக்கும் அவருடைய சகோரர்களுக்கும் இடையே நடந்த பாகப்பிரிவினையில் B அட்டவணையாக என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

வழக்குச் சொத்துக்களை தவிர என்னுடைய மனைவி மேனகா பெயரிலும் என்னுடைய பெயரிலும் தனபால் பெயரிலும் கூட்டு குடும்ப வருமானத்தை கொண்டு சொத்துக்கள் வாங்கப்பட்டன என்றால் சரியல்ல. என் மனைவிக்கும் மகனுக்கும் மாமனார் வாங்கிக்கொடுத்தார். என் பெயரில் சொத்து எதுவும் இல்லை. என் பெயரிலும் சொத்து உள்ளது என்றும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எதிர்வழக்குரைக்கு நீதிமன்றத்தின் அனுமதியுடன் பதிலுரை தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 19.12.1988 ஆம் தேதியன்று மேனாக பெயரில் ஆவண எண்.2309/1988

மூலம் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். அது என் மாமனார் வாங்கிக் கொடுத்தது. 10.04.1985 ஆம் தேதியன்று மேனாக பெயரில் ஆவண எண்.981/1985 மூலம் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். அது என் மாமனார் வாங்கிக் கொடுத்தது. 25.06.1987 ஆம் தேதியன்று என் பெயரிலும் என் மகன் பெயரிலும் ஆவண எண்.1207/1987 மூலம் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அது என் மகன் பெயரில் மட்டும்தான் என் மாமனாரால் வாங்கிக் கொடுக்கப்பட்டது. அப்போது என் மகன் இளவராக இருந்ததால் காப்பாளராக என்னை காட்டி எழுதப்பட்டது. 25.06.1987 ஆம் தேதியன்று தனபால் பெயரில் ஆவண எண்.1206/1987 மூலம் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். தனபாலுக்கு அவருடைய மாமனார் வாங்கிக் கொடுத்தார். மேற்சொன்ன சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்து கூட்டுக் குடும்பத்திற்காக வாங்கப்-பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த பத்தியில் இதற்குமுன் சொல்லப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக் குடும்ப சொத்துக்களாக இருந்தும் அவற்றை இந்த வழக்கில் காட்டாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவை கூட்டுக் குடும்ப சொத்துக்கள் இல்லை. நான் வேண்டு-மென்றே அந்த சொத்துக்களை காட்டாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைநிற்காது என்றால் சரியல்ல.

முதல் விசாரணையில் 1985 ஆம் ஆண்டு நாங்கள் பிரித்துக் கொண்டோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அது சம்மந்தமாக ஆவணம் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் கூட்டாக உள்ளது என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்துக்கள் எதுவும் கூட்டாக இல்லை என்றும் பாகப்பிரிவினை கோர எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போன்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் வழக்குச் சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக் கொடுக்க கோரி ஒருபோதும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலங்கள் சம்மந்தமான சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.